**ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் எழும் தாக்கங்களைத் தவிர்த்து, ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் வரவு மற்றும் செலவு திரண்ட அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட போதும், கைத்தொழில் வரி, வியாபார வரி வியாபார அனுமதிப்பத்திர வருமானம் என்ற அடிப்படையில் கணக்கிலிடப்பட்டிருந்தது. | வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் படி நடத்தல் அவசியமாகும். | கைத்தொழில் வரி, வியாபார வரி, அனுமதிப்பத்திர வருமானம், என்பவற்றிக்கான கணக்காய்வு அறிக்கையின் படி வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் மதிப்பீட்டை நூற்றுக்கு 100 வீதம் பிழையின்றி தயாரிக்க முடியாது. மேலும், இந்த 03 வகையாள வரிகளும் குறித்த வருடத்தில் பெற்றுக் கொண்டு அனுமதிப்பத்திரம் போன்றவை வழங்குதல். |

## (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2014, 2015, 2016 ஆண்டுகளுக்குரிய புத்தளம் காணி பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய முத்திரை வருமானம் ரூபா 2,458,610 கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய முத்திரைப் பணம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | கடந்த ஆண்டிற்குரிய அறவிடப்பட்டு வைப்பாகக்கணக்கிடப்பட்டிருந்த நிலப் பங்கீட்டின் 01 சதவீதமான வரியான ரூபா 417,868 உம் மற்றும் மோட்டார் வாடகைக்கு விடும் வருமானமான ரூபா 74,000 உம் உள்ளீட்ட ரூபா 491,868 திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டுகளின் வருமானம் திரண்ட நிதியத்துடன் சீராக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு கணக்கீடு தயாரிக்கும் போது குறித்த தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய சந்தாப் பணம் ரூபா 420,000 கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது. | செலுத்தப்பட வேண்டிய சகல தொகைகளும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கீடு தயாரிக்கும் போது நிலுவைத் தொகையைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் 05 ஆம் செயற்திட்டத்தின் கீழ் நீர்க் கம்பம் அமைப்பதற்காக பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட சவ்சிரி பூங்கா காணியின் பெறுமதி ரூபா 718,240 கணக்குகளிலிருந்து நீக்கப்படவில்லை. | நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணி சபையின் சொத்துக்களில் இருந்து நீக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கு தயாரிக்கும் போது குறித்த காணியின் பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | விஜயகடுபொத்தவில் அமைக்கப்பட்ட ரூபா 2,602,241 பெறுமதியான நீர் செயற்திட்டம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை | விஜயகடுபொத்த நீர் செயற்திட்டத்தின் கையிருப்புத் தொகை இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்த செயற்திட்டம் நீர்ப்பாசன சபையின் |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட வேண்டும். | மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்டு அந்த சபையின் சிபார்சுடன் இந்த செயற்திட்டம் எமது சபையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் 2018 செப்டெம்பர் 06 ஆந் திகதி இந்தச் சொத்தின் உரிமையை ஒதுக்கி தருமாறு கோரப்பட்ட போதும் இதுவரை இச்சொத்து எமது சபையிடம் ஒப்படைக்கப்படாததால் கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை. |
| (vi) | சபையினால் உபயோகப்படுத்தப்பட்டதும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுவதுமான ரூபா 110,800 பெறுமதியான 10X10 அளவிலான துணி மறைப்புகள் 08 நிலையான சொத்துக்களாகக் கணக்கிடப்படாது கைத்தொழில் கையிருப்புத் தொகையாகக் காட்டப்பட்டுள்ளது. | சபையினால் தற்போது பயன்படுத்தப்படும் சொத்துக்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கு தயாரிக்கும் போது துணி மறைப்புகள் நிலையான சொத்துக்களாக கணக்கெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| | இலக்கம் 126 (XXVII) உப பிரிவு | கடற்றொழிலாளர்களுக்கு நலன்புரி வசதிகளுக்குப் பதிலாக துணைச்சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | உடனடியாக துணைச்சட்டம் அமுல்ப்படுத்து வதன் மூலம் நலனோம்பலை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறிப்பிட்ட துணைச் சட்டத்தை எதிர்காலத்தில் சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் ----------------------------------------------- | | | |
| | (I) விதி இலக்கம் 5(7) | நிதி மற்றும் களஞ்சிய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் போதியளவிற்கு உள்ளகக் கணக்காய்வு முறையொன்று நடைமுறைப்படுத்தப்படவில்லை. | நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | நிதி மற்றும் களஞ்சிய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினூடாக வருடத்திற்கு ஒரு தரம் களஞ்சிய பெறுகை ஏட்டின் மூலமும் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றுள்ளது. |
| | (II) விதி இலக்கம் 33 | வீத வரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்களின் பட்டியலும் சொத்துக்களைத் தடை செய்யும் ஆணைப் பத்திரமும் தயாரிக்கப்பட்டு சொத்து தடை செய்யும் அதிகாரியிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட விதிகளுக்குகேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களுக்கான பதிவேடொன்று கூறப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| | (III) விதி இலக்கம் 165 | மதிப்பீட்டு வரி, நீர் வரி, குத்தகை, நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைப் பணம், வருமானம், நன்கொடை, ஆணைப் பத்திரக் கட்டணம், தண்டம் மற்றும் வருமானக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருமானம் தொடர்பிலும் கணக்குகள் பேணப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கையில் இக் கணக்குகளைச் சரியான முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (IV) விதி இலக்கம் 218 | சபையின் சகல காணி மற்றும் கட்டிடங்களை வருடத்திற்கொரு முறை பரீட்சிப்பதற்குக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பரீட்சிக்கும் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | வட மேல் முதலமைச்சரின் செயலாளரின் இலக்கம் பிசெ/அ/அ/05/06 2012 பெப்ரவரி 26 அந் திகதிய கடிதம் | 67 கவர்ச்சியற்ற வியாபாரம், 26 ஆபத்தான வியாபாரம், மற்றும் 39 கசப்பான, கவர்ச்சியற்ற வியாபாரம் தொடர்பில் அனுமதிப்பத்திரம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாமை தொடர்பில் சட்டரீதியான | இதுவரை காட்டப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்து கடிதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுப்பியுள்ளதோடு எதிர்காலத்தில் அந்த கைத்தொழிகளுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். |
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | XXIV ஆம் அத்தியாயம் 1.6 பந்தி | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அதிகாரிகள் / ஊழியர்கள் 39 பேரின் கடன் தொகையான ரூபா 129,760 தொகையானது 11 வருட காலமாக சீராக்கப்படாது உள்ளது. | மீதி ஊழியர்களின் கடன் மீதிக்காக உத்தியோகத்தர் களின் தகவல்களைத் திரட்டி மீதிக் கடன் தொகை அறவிடப்பட வேண்டும். | 2008 ஆம் ஆண்டிற்கு முன்புள்ள ஊழியர் கடன் தொடர்பாக யாதொரு தகவலும் எம்மிடம் காணப்படாததால் தனிநபர் கோவை உள்ள நபர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தாலும் அது தொடர்பாக எந்தவொரு கிடைக்கப் பெறவில்லை. அதற்கிடையில் சில நபர்கள் மரணமடைந்துள்ளதாகவும் சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் தகவல் கிடைத்த போதும் அது தொடர்பான நிச்சயமான தகவல் இல்லாததால் அந்த கடன் மீதியை அறவிட முடியாதுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,090,303 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,054,473 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், மற்றும் நிலுவை வருமானம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (i) | வீத வரியும், வரியும் | 7,059 | 7.085 | 6,834 | 10,945 | 3,562 | 6,365 | 4,293 | 10,744 |
| (ii) | வாடகை | 4,856 | 7,609 | 9,838 | 2,492 | 5,133 | 8,327 | 8,587 | 4,738 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,135 | 1,185 | 1.209 | - | 1,170 | 1,554 | 1,554 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 49,048 | 49,048 | 26,329 | 54,226 | 48,367 | 47,515 | 53,100 | 35,640 |
| | | 62,098 | 64,927 | 44,210 | 67,663 | 58,232 | 63,761 | 67,534 | 51,122 |

❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புகள் மற்றும் கடந்த வருடங்களில் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும் உள்ளடங்கியுள்ளது.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வுக்கான ஆண்டில் வீதவரியும் வரியுமான வருமானமாக ரூபா 6,834,000 சேகரிக்கப்பட்டிருந்ததோடு அது சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தின் 38 சதவீதமாகும். வாடகை வருமானத்தில் ரூபா 9,838,000 சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், அது சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தின் 80 சதவீதமாகும். சேகரிக்கப்பட வேண்டிய ஏனைய வருமானத்தில் ரூபா 26,329,000 சேகரிக்கப்பட்டிருந்ததோடு அது சேகரிக்கப்பட வேண்டிய தொகையின் 31 வீதமாகும். | சட்டங்களுக்கமைய வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின் பிரகாரம் மீளாய்வுக்கான ஆண்டின் இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 9,865,197 ஆக உள்ளதுடன் அந்த நிலுவையினுள் மீளாய்வுக்கான ஆண்டுக்குரிய சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 2,479,649 ஆகும். அதற்கமைய சேகரிக்கப்பட்ட தொகை நூற்றுக்கு 41 வீதமாகும். மேலும், கடந்த நிலுவையான வீத வரி பெறுமதி மீளாய்வுக்கான ஆண்டில் அறவிடப்பட்ட தொகை ரூபா 3,314,180 ஆகும். | வருமானத்தை சரியான முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு தினங்களில் நிலுவை வருமானத்தைச் சேகரிக்கும் நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு சொத்துத் தடை செய்யும் நடவடிக்கையூடாக நிலுவை வருமானத்தைச் சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வுக்கான ஆண்டிற்கான மதிப்பீடு செயய்யப்பட்டதும் சிட்டையிடப்பட்டதுமான வருமானம் ரூபா 600,000 ஆக உள்ளதுடன் அறவிடப்பட்டது. ரூபா 1,028,280 ஆகும். அதற்கமைய குறை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீடு யதார்த்தமாக இருத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் குறை சிட்டையிடல் இடம் பெற்றாலும் 2019 ஆம் ஆண்டில் அதை திருத்தமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.5 வியாபார அனுமதிப் பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வுக்கான ஆண்டிற்கான மதிப்பீடு செயய்யப்பட்ட தொகை ரூபா 500,000 ஆக உள்ள போதும் நடமாடும் சபையின் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய நுற்றுக்கு 01 சதவீத வரி ரூபா 200,000 ஆகும். மிகுதி ரூபா 300,000 மதிப்பீடு செய்யப்பட்ட தொகையாக சிட்டையிடப்பட்டிருந்தாலும் அறவிடப்பட்ட தொகை ரூபா 283,574 ஆகும். மீளாய்வுக்கான ஆண்டில் | அனுமதிக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுள் விநியோகிக்கப்படாதைவ தொடர்பில் ஆய்வொன்று நடாத்தப்பட வேண்டும். | சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் சில கிடைக்கப் பெறாமையும் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பங்களும் அவற்றுள் இருப்பதனால் வருமானம் குறைந்துள்ளது. |

வியாபார அனுமதிப்பத்திர விண்ணப்பங்களின் எண்ணிக்கை 415 ஆன போதும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 290 ஆகும். இதற்கமைய கணக்கெடுக்கப்படாத நிலுவை வியாபார அனுமதிப்பத்திர வருமானம் அண்ணளவாக ரூபா 125,000 ஆகும்.

### 2.2.6 குத்தகை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வுக்கான ஆண்டில் சிட்டையிடப்பட்ட குத்தகை ரூபா 6,612,368 ஆன போதும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 8,431,085 ஆகும். மீளாய்வு ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 2,168,681 ஆகும். | குத்தகை நிலுவை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்து உரிமையை குத்தகைக்கு விடும் வருமான தலைப்பின் கீழ் உள்ள கடந்த ஆண்டுகளுக்குரிய கேள்வி தொகை நிலுவையாகக் காட்டப்பட்டுள்ளது. |

### 2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 7,367,599 நீதிமன்ற தண்டப் பணமும், ரூபா 36,066,067 முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட வேண்டி இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காட்டப்பட்டுள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வருமானத்தில் அரைவாசிக்கு மேல் இதுவரையில் அறவிடப்பட்டுள்ளதோடு மிகுதித் தொகையை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் பொது மக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற

சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் படி வெளியிடப்பட்ட உபவிதிகள் 17 சட்டமாக்கப்பட்டிருந்தன. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் IX இல் உ, ஊ, எ, ஏ இற்கமைய பொது மக்கள் சுகாதாரம் மற்றும் பொழுது போக்கு வசதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், நிர்வகித்தல் தொடர்பில் உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட உபவிதிக்கமைய இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) பிரதேச சபையின் அதிகாரதிற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சூழற் பெறுமதி மிக்க பறவைகள் சரணாலயத்தைப் பாதுகாப்பதற்கு 126 ஆவது பிரிவின் கீழ் XI (உ) இன் கீழ் இடைக்கால உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உடனடியாக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்ட உபவிதிகள் எதிர்காலத்தில் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் அபிவிருத்தி செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதன் முன்னேற்றத்தை ஆய்வு செய்து பலவீனங்களை இனங்கண்டு முன்னேற்றுவதற்கான | செயல் முன்னேற்றத்தை ஆய்வு செய்து பலவீனங்களை இனங்கண்டு வேலைத்திட்டத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை | வருடாந்த அபிவிருத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கேற்ப வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருப்பதோடு அந்த வேலைத்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் அதற்குரிய சேவையிலும், நிதி |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | முன்னேற்றம் மாதாந்த நிதி முன்னேற்ற அறிக்கைக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது இதற்கமைய இனிமேல் ஒரே அறிக்கையில் செயல் முன்னேற்றத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச அதிகார சபைப் பிரதேசத்தில் 03 டிரக்டர் வண்டிகளைக் கொண்டு ஒரு நாளைக்கு 01 டொன்னைவில் குப்பைகளைச் சேகரித்து பிரதேசத்திலுள்ள காணியொன்றில் குழியை இக் குப்பைகளைக் கொண்டு நிரப்பி அவ்வப்போது மண்ணினால் குழியை மூடுவது நடைபெற்று வந்துள்ளது. பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) மீளாய்வாண்டில் கொம்பேஸ் செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் கழிவுகளை அகற்றுவதற்குப் பொருத்தமான சுற்றாடலுடன் கூடிய காணி சபையிடம் இருக்கவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் கீழ் கொம்பேஸ்ட் செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உற்பத்தியாகும் குப்பைகளை அகற்றுவதற்குப் பொருத்தமான காணி இல்லாத காரணத்தால் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மானவேரியவத்த ராஜகந்தலுவ காயிணில் கொம்பேஸ்ட் செயற்களம் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிரதேசங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிர்ப்பினால் இடையில் நிறுத்தப்பட்டது. |
| (ii) | சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் வகை பிரிக்கப்படாது அகற்றப்படுவதனால் உக்காத பொருட்களினால் ஏற்படும் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் கவனதிற் கொள்ளப்படவில்லை. | குப்பைகள் வகை பிரித்து குறித்த கழிவுகளை மீள் சுழற்சி செய்தல் வேண்டும். | 2018 அம் அண்டில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்ட போதும் அக் கழிவுகள் பேல் செய்தல் அவசியமாகும் ஆயினும், எங்கள் சபையிடம் பேல் இயந்திரம் இல்லாமையால் அக் கழிவுகளை மீள் சுழற்சி நிறுவனத்திடம் வழங்குவதற்கு முடியவில்லை ஆயினும் 2019 ஆம் ஆண்டில் சிலாபம் நகர சபையின் பேல் இயந்திரம் மூலம் அவை மீள்சுழற்சி நிறுவனத்திடம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் படி 1136 வியாபார நிலையங்கள் இருந்தாலும் மீளாய்வுக்கான அண்டில் வியாபார அனுமதிப்பதிர வருமானம் சேகரிக்கப்பட்டிரந்தது. 295 இல் மட்டுமே அது நூற்றுக்கு 26 | வியாபார நிறுவனங்களை வேறு வேறாக இனங்காண்பது செய்யப்பட வேண்டும். | வருடாந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் படி 1136 வியாபார நிலையங்களுள் அனுமதிப்ப த்பதிரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையங்கள் மட்டும்மல்லாது கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதமாகும். | | வேண்டிய நிலையம் அனைத்தும் அடங்கும். |
| (ஆ) | வருடாந்தம் அதிகரிக்கும் வரி, முத்திரைக் கட்டணம், மற்றும் நீண்ட காலமாக அறவிடப்படாதுள்ள மதிப்பீட்டு வரி, கடை வாடகை, நீதிமன்றத் தண்டப் பணம் அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்படும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கையும் டீவறு வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | சகல வரி சொத்துக்களுக்கும் உடன்படிக்கை செய்யப்பட வேண்டியதுடன் அனவிலந்துவ பிரதேசத்தில் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 04 கடைகளுக்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஒழுங்கு முறையான ஒப்பந்தங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | இதுவரை குறிப்பிடப்பட்ட கடைகளுக்கான ஒப்பந்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்பதை அறியத்தருகிறேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 87 ஆகவும் உண்மையான பதவியணி 75 ஆகவும் உள்ளதோடு அதில் இரண்டாம் தர பதவி வெற்றிடங்கள் 06 உம் ஆரம்ப நிலை பதவி வெற்றிடங்கள் 06 உம் உள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேலதிகத் தொகைக்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்பொது நிலவும் 02 பதவி வெற்றிடங்களை நிரப்ப அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு ஒதுக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 7,675,400 பெறுமதியான 03 காணித் துண்டுகள், ரூபா 1,584,816 பெறுமதியான வராந்த சந்தையின் மாமிசக் கடை, மற்றும் ரூபா 13,322,294 பெறுமதியான 04 கட்டங்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டுப் பேணப்படல் வேண்டும். | 03 காணித்துண்டுகள் மற்றும் வாராந்த சந்தை மாமிசக் கடை என்பன அடுத்த வருட நிலையான சொத்துப் பதிவேட்டில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தயாரிக்கப்பட்டிருந்த வரவு, செலவுக்கேற்ப 54 செலவு விடயங்களின் ரூபா 3,381,252 முழுமையான நிதி ஒதுக்கீடு மீதமாக இருந்தது. 49 செலவு விடயங்களின் நிதி ஒதுக்கீட்டடில் நூற்றுக்கு 20 சதவீதத்திற்கும் அதிகமான அளவு மீதமாக இருந்தது. அவ்வாறே மூலதனப் பெறுகைகளுக்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக முறையில் தயாரிக்கப்பட வேண்டும். | விஜயகடுபத்த நீர் செயற்திட்டத்தின் நீர்க்குழாய் அமைத்தல் கடன் தருநராகக் காட்டப்பட்டுள்ளதோடு நிதி ஒதுக்கீடும் கிடைக்கப்பெறவில்லை. விளையாட்டுத் திடல், மயான பூமி அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக காணி ஒதுக்கப்படாததனால் குறித்த அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படாததோடு குழாய்க் கிணறு திருத்த வேலைகளுக்கு தேவைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாமையாலும் பல்வேறு நிறுவனங்களின் அனுசரணை கிடைத்திருந்தமையாலும் நிதி மீதமாகவிருந்தது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய சபையின் நிதி மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கை தொடர்பான உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வைத் திடப்படுத்த வேண்டும். | இது வரையிலும் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதோடு அதன் மூலமாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படும். |